2020 செப்டம்பர் 15]

கல்லூரிகள் செயல்படுகின்றன. அதேபோல, 4 அரசு உதவிபெறும் கல்லூரிகளும் செயல்படுகின்றன. அரசு உதவிபெறக்கூடிய கல்லூரிகளிலே இன்றைக்கு மாணாக்கர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. சுயநிதிக் கல்லூரிகளில் மட்டும்தான் அவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்படுகின்றது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் கல்லூரிகளே இல்லாத பகுதியிலே கல்லூரிகளை வழங்க வேண்டுமென்பது மாண்புமிகு அம்மாவின் அரசினுடைய எண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கல்வியாண்டிலேகூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அந்தக் கூடுதல் இடங்களைத் தந்து அந்த மாணாக்கர்களுடைய விண்ணப்பத்திற்கேற்ப அந்தந்தப் பகுதியிலே அவர்களுடைய சேர்க்கைக்கு இந்த அரசு வழிவகை செய்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

7—

தொழிற்சாலை அமைத்தல்

***51503—திரு. செ. சண்முகையா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் புதிய தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இருப்பினும் தொழில் முதலீட்டாளர், ஒட்டப்பிடாரத்தில் தகுந்த தொழில் முதலீடு மற்றும் செயற்குறிப்புடன் வருகை தந்தால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், TIDCO, அவர்களுடன் இணைந்து சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா அவர்கள்.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்கியும், வருங்கால தமிழ் சமூகம் வாசல்களில் வண்ணப் பூக்களை தூவி வரவேற்கக் காத்திருக்கும் வருங்கால முதல்வரும், தமிழக மக்களையும், தமிழ் மொழியையும் பாதுகாத்துவரும் எங்களுடைய கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களை வணங்கியும், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் இடைத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்து என்னுடைய வெற்றிக்காக இரவு, பகல் பாராது தொகுதி மக்களையெல்லாம் நேரில் சந்தித்து வாக்குகளைச் சேகரித்து அயராது பாடுபட்ட கழக தளபதியார் அவர்களுக்கும், எனது வெற்றிக்காக அயராது உழைத்திட்ட கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அயராது உழைத்திட்ட கழக மகளிர் அணிச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்திட்ட இளைஞர் அணியின் எதிர்காலம் கழக இளைஞர் அணிச் செயலாளர் திரு. உதயநிதி அவர்களுக்கும், எங்கள் தொகுதியில் கழகத்தால் நியமிக்கப்பட்ட தேர்தல் பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சரும், கழக முதன்மைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் நேரு அவர்களுக்கும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறுப்பாளரும், நலத் திட்ட நாயகரும், திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், கழகம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை தந்த கழகத்தின் அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும், கழக

2020 செப்டம்பர் 15]

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஒட்டப்பிடாரம் தொகுதியில் உதயசூரியனை உதிக்கச் செய்த வாக்காளர் வள்ளல் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். தொகுதி மக்கள் நலன் கருதி ஒட்டப்பிடாரத்தில் தொழில் ஏற்றுமதிப் பூங்கா அமைக்கப்பட வேண்டும். மேலும் தொகுதியில் விளைகின்ற விவசாயப் பொருட்கள், ஆயத்த ஆடைகள் உற்பத்தி, உப்பு உற்பத்தி, கடல் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், உதிரிப் பாகங்கள் உற்பத்தி போன்ற பல்வேறு உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும் மதிப்புக் கூட்டி ஏற்றுமதி செய்ய முடியும். எனவே, கப்பல் போக்குவரத்து வசதி, இரயில் போக்குவரத்து வசதி, சாலைப் போக்குவரத்து வசதி மற்றும் விமானப் போக்குவரத்து வசதி இருப்பதால் ஒட்டப்பிடாரம் தொகுதியில் தொழில் ஏற்றுமதிப் பூங்கா அமைத்திட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி வட்டம், நீலாவட்டம் கிராமத்தில் SIPCOT நிறுவனத்தினால் Phase–I, SIPCOT Estate 1,083 ஏக்கரில் தொழில் வளாகம் உருவாக்கப்பட்டு, தற்போது தொழிற்பூங்கா முழுமையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், ஒட்டப்பிடாரம் வட்டம், தெற்குப் பகுதியில் வீரபாண்டியபுரம் கிராமத்தில் SIPCOT தொழிற்பேட்டை வளாகத்திற்கு, Phase–II–க்கு 1,553 ஏக்கர் நிலம் கையகப்படுத்த திட்டமிடப்பட்டு, இதுவரை 1,224 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

இதுமட்டுமல்ல, ஒட்டப்பிடாரம் வட்டம், சில்லாநத்தம் கிராமத்தில் சுமார் 406 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு

அங்கு ஒரு தொழிற்பூங்கா அமைக்க அரசின் நிருவாக அனுமதி கோரப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், தூத்துக்குடி வட்டம், விளாத்திகுளம் வட்டம், வைப்பாறு கிராமத்தில் 1,019 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலம் முன்னுழைவு அனுமதியுடன் (enter upon permission) சிப்காட் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், விளாத்திகுளம் வட்டம், வேலாயுதபுரம் கிராமத்தில் 355 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு, முன்னுழைவு அனுமதி பெறும் நடவடிக்கையையும் (enter upon permission) சிப்காட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதுமட்டுமல்ல, தூத்துக்குடி வட்டம், அல்லிகுளம் பகுதியில் 6 ஊராட்சி கிராமங்களில் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைக்கும் பணிக்கென சுமார் 2,246 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, நிலம் கையகப்படுத்துவதற்குண்டான அரசின் நிருவாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை சிப்காட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்கப்பட்டு செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். இதன்மூலம் ஒட்டப்பிடாரம் பகுதி, தூத்துக்குடி மாவட்டத்தின் மொத்த தொழிற்பேட்டைகளுக்கான மனை தேவை பூர்த்தி செய்யப்படும். அங்கு ஏற்கெனவே Sea Port வசதி இருக்கிறது. Rail connectivity இருக்கிறது; Airport connectivity இருக்கிறது. அனைத்து தொழிற்பேட்டைகளுக்குண்டான மனைகள் உருவாக்கப்படும்போது நிச்சயமாக தொழிற்சாலைகள் மேம்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா அவர்கள்.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பகுதி மக்களிடையே சமூக நல்லிணக்கம் இல்லாத காரணத்தால் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று, 1999 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்ட நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் உயர்மட்டக் குழுவின் ஆய்வறிக்கையின்படி, தென் மாவட்டத்திலே தொழில்வளத்தைப் பெருக்கிட கலைஞர் ஆட்சியிலேதான் 2006 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தூத்துக்குடி மாவட்டம், வடக்கு காரசேரியில்,

2020 செப்டம்பர் 15]

கழக ஆட்சியில் தளபதி அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது, தளபதி அவர்களால் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையும் துவங்கப்பட்டது. இந்த ஆட்சியிலே அவை சரிவர செயல்படுத்தப்படவில்லை. எனவே, ஒட்டப்பிடாரம் தொகுதியில் தொழில் ஏற்றுமதிப் பூங்கா உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டு விதி 110–ன்கீழ் வெளியிட்ட அறிக்கையிலே, தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டுமென்று பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். 50 per cent of the land property incentive கொடுத்திருக்கிறார்கள், Electricity Tax free கொடுத்திருக்கிறார்கள், Stamp duty முழுவதும் free. 250 கோடி ரூபாய் முதலீட்டில் எந்தத் தொழில் நிறுவனம் வந்தாலும், அந்தப் பகுதியில் இருக்கிற தொழில் முதலீட்டாளருக்கு உதவும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், தேனி மாவட்டம், விருதுநகர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டங்களில் நிலங்களைக் கையகப்படுத்தி Land Bank create செய்ய வேண்டும் என ஆணை பிறப்பித்ததற்கிணங்க கிட்டத்தட்ட 11,000 ஏக்கர் அளவிற்கு Land Bank create செய்ய ஒரு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முயற்சியினால் Madurai to Thoothukudi தொழில்வழி மேம்பாட்டுச் சாலைகூட அமைப்பதற்கான வழிவகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுகூட, இராமநாதபுரம் மாவட்டத்தில் 537 ஏக்கர் நிலத்தை குறிப்பாக அதாவது, மணக்குடி கிராமத்தில் 225 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறோம். சக்கரக்கோட்டை பகுதியில் பட்டினம்காத்தான் கிராமத்தில் கிட்டத்தட்ட 312 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, தேனி மாவட்டத்தில், தப்பகுண்டு பகுதியில் 554 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. குமாரலிங்கபுரம், முத்துலிங்கபுரம் பகுதிகளில் 1,500

ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, கையகப்படுத்தப்பட்டுள்ளது. கங்கைகொண்டான் பிரிவில் Phase–II தொழில் விரிவாக்கம் செய்திருக்கிறோம். Phase–II–க்கு என கிட்டத்தட்ட 1,697 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, சிப்காட் நிறுவனத்திடம் Enter Upon Permission கேட்டுள்ளோம். E.I.A. (Environmental Impact Assessment) clearance–க்கு Government of India–க்கு நாங்கள் அனுப்பியிருக்கிறோம். அந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பகுதியில் இருக்கும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. தூத்துக்குடி தொழில் வளாகம் phase–III-க்கு, விளாத்திகுளம் வட்டத்திலே 5,640 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக 11 ஆயிரம் ஏக்கர் வரையறை செய்து 8,282 ஏக்கர் சிப்காட் வசம் Land Bank create செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11–10

இன்றைக்கு சென்னை–கன்னியாகுமரி Industrial Corridor Road அமைக்கப்படும் என்று Government of India announce செய்திருக்கிறார்கள். அதில், திண்டுக்கல் ஒரு zone ஆகவும், மதுரை ஒரு zone ஆகவும், தூத்துக்குடி ஒரு zone ஆகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், மாநிலத்திலே ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சி, குறிப்பாக தென் மண்டல வளர்ச்சி மிக முக்கியம் என்பதால் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியிலே செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாக இதனைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்ல, தூத்துக்குடி பகுதியிலே Al Kharafi என்ற ஒரு industry வருகிறது. அல்லிகுளம் பகுதியில் இதற்கெனக் கிட்டத்தட்ட 2,264 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, நிருவாகப் பணிகளெல்லாம் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன. ஏற்கெனவே 35 ஆயிரம் கோடி ரூபாயில் நாங்கள் MoU போட்டிருக்கிறோம். உடனடியாக அல்லிகுளம் பகுதியில் Al Kharafi என்ற அந்தத் தொழிற்சாலை refinery unit, MoU கையொப்பமிட்டு ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 செப்டம்பர் 15]

அதுமட்டுமல்ல, இப்பொழுது சில்லாநத்தம் பகுதியில் இருக்கின்ற வீரபாண்டியபுரம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கிறது. ஒட்டப்பிடாரம் வட்டத்தில் வீரபாண்டியபுரம் தெற்குப் பகுதியில் கிட்டத்தட்ட 1,224 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ready ஆக இருக்கிறது. சில்லாநத்தம் பகுதியில் 406 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. நிலத்தைக் கையகப்படுத்திய பின், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் நிச்சயமாக தொழிற்சாலைகள் அமையும். ஒட்டுமொத்த வளர்ச்சிதான் மாநில முதலமைச்சர் அவர்களுக்கு முக்கிய எண்ணம் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அந்த அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இந்தத் திட்டம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டது. தென் மண்டல வளர்ச்சிக்கு பல்வேறு சலுகைகள்; இன்றைக்கு சென்னைக்கு சலுகைகள் இல்லை, ஓசூருக்கு சலுகைகள் இல்லை, கோயம்புத்தூருக்கு சலுகைகள் இல்லை. தென் மண்டலத்தில் இருக்கின்ற 9 மாவட்டங்கள், இன்றைக்கு 10 மாவட்டங்களாக சேர்ந்திருக்கின்றன. 10 மாவட்டங்களின் வளர்ச்சிக்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள் என்பதைக் குறிப்பிட்டு இந்த மனைகளெல்லாம் உருவாக்கப்படும்போது நிச்சயமாக ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர. முத்தமிழ்செல்வன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

8—

கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள்

***64156—திரு. ர. முத்தமிழ்செல்வன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—